9-00 திரு. ஆ. கு. சுப்பையா : இந்த விபத்திற்குக் காரணமானவர்களின் மீது இன்னும் வழக்கு தொடராமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. வழக்கு தொடரப்படாமல் இல்லை.

It has been reported that the licensee Sri Aziz was arrested on 27—11—1965 and released on bail.

போலீஸ் துறை மாநாடு

* 262 கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலங்களில் தொழில் அமைதிக்காகவும், துறைமுகங்களின் அமைதிக்காகவும் இரண்டு வித போலீஸ் படைகளை நிறுவ வேண்டுவது பற்றி ஜூன் மாதத்தில் டில்லியில் நடைபெற்ற போலீஸ்துறை மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்மீது இம்மாநில அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த மாநிலத்திலுள்ள போலீஸார் தொகையை அதிகரிக்க வேண்டும் என்று நேற்றைய தினம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒட்டியும், ஒவ்வொரு துறைக்கும் ஒரு போலீஸ் இருந்தால் நல்ல முறையில் லா அண்டு ஆர்டர் கவனிக்கப்படும் என்பதை ஒட்டியும், தொழில் அமைதிக்காக ஒரு போலீஸ் படையும், துறைமுக அமைதிக்காக ஒரு போலீஸ் படையும், பொதுவாக ஒரு போலீஸ் படையும் இப்படி மூன்று படைப் பிரிவுகள் அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் முதலில் கேள்வி கேட்டது போலீஸ் துறை மாநாட்டில் இந்த விஷயம் பரிசீலிக்கப்பட்டதா என்பது. அது தான் இல்லை என்று பதில் சொன்னேன். இந்த அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு அதைப் பற்றித் தெரிவித்திருக்கிறது. குறிப்பாக தொழிற்சாலைகளைக் கவனிப்பதற்குத் தனியாக போலீஸ் வைப்பது என்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்திருக்கிறது. அவ்வாறு செய்வது நல்லது என்று இந்த அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. போர்ட் டிரஸ்டைப் பொறுத்த மட்டிலும், ஏற்கனவே மெட்ராஸ் ஸிடியில் ஹார்பர் போலீஸ் என்று இருக்கிறது. அதுவே இருந்தால் நல்லது. அதற்காக தனியாக போலீஸ் வைக்கவேண்டாம் என்று இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

12th March 1966]

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படியென்றால் எப்பொழுது அந்த உத்தேசம் அமலாக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : எப்பொழுது மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தைக் கேட்டு, அவர்களுடைய அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்றார்களோ, நடத்தும்படி சொல்லுகிறார்களோ, அப்பொழுது எடுத்துக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படி அமைக்கப்படுகிற போலீஸ் பிரிவு நம்முடைய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாக விளங்குமா அல்லது இந்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டதாக விளங்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : அநேகமாக நம்முடைய மேற்பார்வையிலேதான் இருக்கும். அந்தந்த இண்டஸ்ட்ரீஸ் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள்

*263 **கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அடகு வைத்திருப்பவர்களின் தங்க நகைகளை மீட்டு அவற்றை நாட்டின் பாதுகாப்புக்காகப் பத்திரப்படுத்திப் பயன் படுத்துவது பற்றி அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : The proposal was examined and dropped by the Government.

திரு. இராம. அரங்கண்ணல் : அடகு வைத்திருக்கிறவர்களுடைய தங்க நகைகளை மீட்டு அவற்றை நாட்டின் பாதுகாப்புக்காக பத்திரப் படுத்த வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்தி காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் அவர்கள் பல இடங்களில் பேசியிருக்கிறார்கள். அந்தக் கட்சிக் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லையா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கட்சியினுடைய கொள்கை பரிசீலனை செய்யப்பட்டதா, இல்லையா என்பது பிரச்னை இல்லை. இது போன்ற ஒரு கருத்து இருந்தது. அதைப் பரிசீலனை செய்ததிலே இப்பொழுது இருக்கக்கூடிய 1943-ம் ஆண்டு மெட்ராஸ் பான் ப்ரோகர்ஸ் சட்டப்படி அடகு வைத்து அந்த நகைகள் மூழ்கிப் போகக்கூடிய காலத்தில் அவற்றை ஏலம் போட வேண்டுமே தவிர வேறு வழி இல்லை என்பதை அரசாங்கம் உணர்ந்த காரணத்தினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : அடகு வைத்திருப்பவர்களுடைய நகைகள் மூழ்கி விட்டால் தனிப்பட்ட ஒருவருக்கு அந்த நகைகள் சொந்தமாகிவிடுகிறது. அப்படியில்லாமல் அடகு வைத்திருப்பவர்களுக்கு நன்மை செய்யும் விதத்திலும், அந்தத் தங்க நகைகளை